Nestlé Good food, Good life

# பத்திரிகை செய்தி

கொழும்பு, 19 செப்டெம்பர் 2022

## நெஸ்லே லங்கா விநியோக மையத்தின் பாதுகாப்புடனான செயற்பாடுகள் 4,000 நாட்கள் என்ற சாதனை இலக்கினை எட்டியுள்ளது

நெஸ்லே லங்கா விநியோக மையத்தின் பாதுகாப்புடனான செயல்பாடுகள், 4,000 நாட்கள் என்ற சாதனை இலக்கினை எட்டியுள்ளதுடன், நிறுவனம் தனது பணியாளர்கள் மற்றும் அவர்களின் பாதுகாப்பின் மீது கொண்டுள்ள வலுவான அர்ப்பணிப்பை இது மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது. குருநாகலில் அமைந்துள்ள மற்றும் அதன் விநியோக நிர்வாக ஏற்பாட்டுக் கூட்டாளரான EFL 3PL உடன் இணைந்து செயற்படும் நெஸ்லே லங்கா விநியோக மையத்தின் ஊழியர்கள் 150 க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட ஒரு அணியாக உள்ளனர். மிகவும் நேசிக்கப்படும் நெஸ்லே தயாரிப்புகளை திறன்மிக்க வகையில் களஞ்சியப்படுத்தி, அவற்றின் போக்குவரத்தை உறுதிசெய்து, நாடளாவிய ரீதியில் உள்ள நுகர்வோர்களுக்கு அவை கிடைக்கும் வகையில் இவ்வணி சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

இந்த குறிப்பிடத்தக்க சாதனை இலக்கினை நினைவுகூரும் நிகழ்வு ஒன்று 2022 ஆகஸ்ட் 30 அன்று நெஸ்லே லங்காவின் விநியோக மையத்தில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அனுர பிரியதர்ஷன யாப்பா, நெஸ்லே லங்கா முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. ஜேசன் அவன்சென்யா, நெஸ்லே லங்காவின் வழங்கல் சங்கிலிக்கான துணைத் தலைமை அதிகாரியான திரு. பஞ்சாட்சரம் சத்தியேந்திரா, EFL 3PL பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சம்மி அக்பர், நெஸ்லே லங்கா மற்றும் EFL 3PL அணிகள் ஒன்றிணைந்து இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர். கடுமையான பாதுகாப்பு வழிகாட்டுதல்களை கடைபிடித்தவாறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் உரையாற்றிய நெஸ்லே லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. ஜேசன் அவன்சென்யா அவர்கள் கருத்து வெளியிடுகையில், ''எமது விநியோக மையத்தின் பாதுகாப்பான செயல்பாடுகள் 4,000 நாட்களை எட்டிய சாதனை இலக்கினைக் கொண்டாடுவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். எமது வணிகத்தின் இதயநாடியாக எமது பணியாளர்கள் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். எனவே, நெஸ்லே நிறுவனத்தில் பாதுகாப்பு என்பது எப்போதும் முன்னுரிமையாக உள்ளது. பணியிடத்தில் தமது சொந்த பாதுகாப்பை உறுதிசெய்து, எமது கடுமையான பாதுகாப்புத் தராதரங்களை நிலைநாட்டுவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு பணியாளரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். இன்று நாம் எதிர்கொள்ளும் பல நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில் எமது வணிகச் செயல்பாடுகளின் தொடர்ச்சிக்காக விநியோக மைய அணியினர் ஆற்றி வருகின்ற சிறந்த பணிகளையும் இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,'' என்று குறிப்பிட்டார்.

''எம்மைப் போன்ற சிறந்த விழுமியங்களைக் கொண்ட ஒரு நிறுவனத்துடன் பணிபுரிவது எமக்கு கிடைக்கப்பெற்ற ஒரு வரப்பிரசாதமாகும். EFL 3PL இல், பணியாளர்களின் பாதுகாப்பே எமது தலையாய முன்னுரிமையாகும். எமது அணிக்கு தினந்தோறும் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்யும் நெஸ்லே நிறுவனத்தின் கடுமையான வழிகாட்டுதல்களுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நெஸ்லே உடனான எங்கள் கூட்டாண்மையை வலுப்படுத்தவும், மேலும் பல சாதனை இலக்குகளை ஒன்றாக அடையவும் நாங்கள் ஆவலுடன் உள்ளோம்!,'' என்று EFL 3PL இன் பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு. சம்மி அக்பர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ அனுர பிரியதர்ஷன யாப்பா அவர்கள், 115 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் நெஸ்லே லங்காவின் பயணம் மற்றும் நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு அதன் பங்களிப்பு குறித்து தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார் ''குருநாகலில் பிறந்து வளர்ந்ததால், நெஸ்லே தனது தொழிற்சாலையை இங்குள்ள பன்னலயில் ஸ்தாபித்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இது தொடர்ச்சியான முதலீடு மற்றும் வேலைவாய்ப்பை தோற்றுவிப்பதன் மூலம் சமூகத்தில் ஏராளமானவர்களுக்கு நற்பலன் அளித்துள்ளது. பெரும்பாலான இலங்கை மக்கள் நெஸ்லேவின் தயாரிப்புகளுடன் வளர்ந்துள்ளனர். அத்துடன் தமது ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிசெய்து, உயர்தரத்துடனான தயாரிப்புகளை நுகர்வோருக்கு கிடைக்கச் செய்வதற்கான ஓயாத முயற்சிகளுக்காக நெஸ்லே லங்கா மற்றும் EFL 3PL ஆகிய இரு நிறுவனங்களினதும் முயற்சிகளை நான் பாராட்ட விரும்புகிறேன்,'' என்று குறிப்பிட்டார்.

மிக உயர்ந்த பாதுகாப்பிற்கான தமது உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் வகையில், நெஸ்லே லங்கா மற்றும் EFL 3PL இன் சிரேஷ்ட நிர்வாகம் ஒரு உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர். அதாவது பணியிடத்தில் ஒருவரின் சொந்த பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை நினைவூட்டும் வகையில் அவர்கள் அங்கு கலந்துகொண்டிருந்தவர்கள் முன்னிலையில் இந்த உறுதிமொழியை முன்வைத்தனர். மேலும், ஊழியர்களின் பிள்ளைகள், பாதுகாப்பு தொடர்பில் தாம் கொண்டுள்ள விளக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சித்திரப்

போட்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. பொறுப்புணர்வுடனான நடத்தையை ஊக்குவிப்பதற்காகவும், பாதுகாப்புக் கலாச்சாரத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காகவும் உயர்ந்த பாதுகாப்புத் தரத்தை வெளிப்படுத்திய ஊழியர்களை அங்கீகரிப்பதற்காக விருது வழங்கும் வைபவமும் நடத்தப்பட்டது.

'தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்' என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது. 1906 ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று, நெஸ்லே இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. 25,000 க்கும் மேற்பட்ட இலங்கை பால் உற்பத்தி மற்றும் தென்னை விவசாயிகள் மற்றும் வீடுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களித்து வருவதுடன், 800 க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது.

---

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழகக்கோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |


| Image Name | புகைப்படத்தில் இடம்பெற்றுள்ள காட்சி |
|---|---|
| Aerial | குருநாகலிலுள்ள நெஸ்லே லங்கா விநியோக மைய அணியின் ஆகாயத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படம் |
| Winners | விருதுகள் வழங்கும் வைபவத்தில் வெற்றியாளர்கள் மற்றும் பிரமுகர்கள்<br><br>இடமிருந்து வலப்புறமாக: திரு. தினேஷ் டி சில்வா, சிரேஷ்ட முகாமையாளர் - வாடிக்கையாளர் சேவைகள், நெஸ்லே லங்கா; திரு. பஞ்சாட்சரம் சத்தியேந்திரா, துணைத் தலைமை அதிகாரி - வழங்கல் சங்கிலி, நெஸ்லே லங்கா; பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அனுர பிரியதர்ஷன யாப்பா; திரு. ஜேசன் அவன்செனியா, முகாமைத்துவப் பணிப்பாளர், நெஸ்லே லங்கா; திரு. சம்மி அக்பர், பிரதம நிறைவேற்று அதிகாரி, EFL 3PL |